**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இந்தக் களத்தூரைப் பொறுத்த வரையில் ஏற்கனவே முக்கூட்டு மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட கூலி நிர்ணய விகிதத்தை அங்குள்ள மிராசுதார்கள் அங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்குத் தர மறுத்ததன் காரணமாக, ஏற்கனவே, ஒரு தகராறு ஏற்பட்டு அந்தத் தகராறின் முடிவில் நடேச வாண்டையார் என்பவர் கொல்லப்பட்டு, வழக்கு மன்றத்தில் இந்த வழக்கு இருந்து வருகிறது. அதையொட்டி அங்கே அன்றாட கூலி வேலை செய்கின்ற தொழிலாளர் நண்பர்கள் 30 பேர், அவர்களுக்கு இவ்வளவு தான் தரமுடியும் என்று நிர்ணயம் செய்த கூலியை வாங்க மறுத்ததன் காரணமாக, அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்றும், ஆனால் திரு. சுப்பையா அவர்கள் எழுப்பியது போல அவர்கள் ஊரைவிட்டு விரட்டி அடிக்கப்படவில்லை என்றும் அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. மேலும் அதைப்பற்றிய தகவல்களை முற்றிலும் தெரிந்து கொள்ளவும், அங்கே அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது அரசின் அன்றாட அலுவல்களின் கீழ் வருவதன் காரணமாக, இந்த அவையை ஒற்றிவைத்து, இதைப்பற்றி விவதிப்பதற்கு அவசியம் இல்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தை ஒட்டி, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன். பொதுவாக, நிதிநிலை அறிக்கை பற்றி விவாதம் நடக்கின்ற நேரத்தில் ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி அளிப்பதில்லை என்ற ஒரு பழக்கத்தை இந்த மன்றம் மேற்கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 6. அறிவிப்பு.

### பேரவை நிகழ்ச்சி விபரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

1—3—1969-ம் நாள், அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விபரத்தை நான் இப்பொழுது அறிவிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 3—3—1969 | திங்கள் | | |
| 4—3—1969 | செவ்வாய் | 6 நாட்கள் — | 1969–70–ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். |
| 5—3—1969 | புதன் | | |
| 6—3—1969 | வியாழன் | | |
| 7—3—1969 | வெள்ளி | | |
| 8—3—1969 | சனி | | |
| 9—3—1969 | ஞாயிறு .. | விடுமுறை. | |
| 10—3—1969 | திங்கள் | | |
| 11—3—1969 | செவ்வாய் | | |
| 12—3—1969 | புதன் | | |
| 13—3—1969 | வியாழன் | | |
| 14—3—1969 | வெள்ளி | | 1969–70-ம் ஆண்டுக்கான் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (14 நாட்கள்) |
| 15—3—1969 | சனி | | |
| 16—3—1969 | ஞாயிறு .. | விடுமுறை. | |
| 17—3—1969 | திங்கள் | | |
| 18—3—1969 | செவ்வாய் | | |
| 19—3—1969 | புதன் .. | தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை. | |
| 20—3—1969 | வியாழன் | | |
| 21—3—1969 | வெள்ளி | | |
| 22—3—1969 | சனி | | |
| 23—3—1969 | ஞாயிறு .. | விடுமுறை. | |
| 24—3—1969 | திங்கள் | | |

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| | | | |
|---|---|---|---|
| 25—3—1969 | செவ்வாய் .. | (1) 1968-69-ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கையை அளித்தல். (ஆளுநரின் இசைவுக்கு உட்பட்டு) (2) 1969-70-ம் ஆண்டுக்கான கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் | வாக்கெடுப்பும். (14 நாட்கள்). |
| 26—3—1969 | புதன் | (1) [illegible] (2) நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல். | |
| 27—3—1969 | வியாழன் .. | (1) 1968-69-ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கையின்மீது பொது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல். | |
| 28—3—1969 | வெள்ளி .. | நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். | |
| 29—3—1969 | சனி .. | மொகரம்—விடுமுறை | |
| 30—3—1969 | ஞாயிறு .. | விடுமுறை. | |
| 31—3—1969 | திங்கள் .. | அரசினர் மசோதாக்கள், ஏதேனும் இருப்பின். | |

வழக்கம்போல, பேரவை காலை 9 மணி முதல் கூடும்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை இன்மையும், நிவாரண வேலைகளை மேற்கொள்ளலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, திரு. டி. மார்டின், திரு. நா. சவுந்திரபாண்டியன், திரு. கே. விநயகம் ஆகியோர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர், மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களைப் பஞ்ச பிரதேசங்களாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்தி வைத்தல், போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

செங்கற்பட்டு, வடாற்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், குறிப்பாக சாத்தாங்குளம் தொகுதியில் உள்ள கிராமங்களில், பருவமழை தவறியதால், மேற்படி மாவட்டங்களைப் பஞ்ச பிரதேசங்களாக அறிவித்து, நிலவரியை தள்ளுபடி செய்தல், கடன்களை ஒத்திவைத்தல் போன்ற நிவாரண வேலைகளை மேற்கொள்ள வண்டிய அவசியம் பற்றிய அவசாப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.